IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அசல் வழக்கு எண். 235/2018**

சாட்சி : PW– 1

பெயர் : திரு. T.R. மணிசேகரன் தேதி : 11.07.2023

**குறுக்குவிசாரணை** :– (1, 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் 2ம் பிரதிவாதியால் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது )

நான் கடந்த 43 வருடங்களாக ஜவ்வரிசி தொழில் செய்து வருகிறேன். எனக்கு சொந்தமாக ஒரு கிழங்கு மில்லும், வாடகைக்கு 5 மில்களும் உள்ளன. எனக்கு சொந்தமான கிழங்கு மில் அனந்தகவுண்டம்பாளையம் என்ற ஊரில் உள்ளது. நான் வாடகைக்கு நடத்தி வந்த மில்கள் அனைத்தும் இராசிபுரம் வட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். வாடகைக்கு எடுத்த மில்களை எனது பங்குதாரர்கள் நிர்வகித்து வருகிறார்கள். வாடகைக்கு எடுத்த மில்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் ஜவ்வரிசியை நான் நேரடியாக வடமாநிலங்களுக்கு அனுப்புகிறேன் என்றால் சரியல்ல. Sacoserve மூலம் விற்பனை செய்கிறேன்.

1ம் பிரதிவாதியின் கணவர் திரு. இரத்தினம்பிள்ளையை எனக்கு 1994லிருந்து 4 வருடங்களுக்கு முன்பாக தெரியும். சேலத்தில் 1982ம் வருடம் Sacoserve ஆரம்பிக்கப்பட்டது. 1988ம் வருடத்திற்கு முன்பே எனக்கு இரத்தினம்பிள்ளையை தெரியும் என்றால் சரியல்ல. இரத்தினம்பிள்ளை குடும்பத்தாருக்கு தீவட்டிப்பட்டியில் கிழங்கு மில் உள்ள விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் பேச்சுவாக்கில் தெரியும். தீவட்டிப்பட்டியில் உள்ள இரத்தினம்பிள்ளைக்கு சொந்தமான கிழங்கு மில்லை நான் இரத்தினம்பிள்ளையிடம் நேரடியாக பேசி முதலில் 7 வருடங்களுக்கு வாடகைக்கு எடுத்து தொழில் செய்தேன்.

மேற்படி இரத்தினம்பிள்ளையிடம் கிழங்கு மில்லை நான் தனிப்பட்ட முறையில் வாடகைக்கு எடுத்தேன். வா.சா.ஆ.–1 வாடகை ஒப்பந்தப்பத்திரத்தின் அசலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

வா.சா.ஆ.–1 வாடகை ஒப்பந்தப்பத்தின் அசல் என்னிடம் இல்லை என்றால் சரிதான். சாட்சி தாமாக தேடிபார்த்து எடுப்பதாக கூறுகிறார். இரத்தினம்பிள்ளையிடமிருந்து கிழங்கு மில்லை நான் நடேசன், செந்தில்குமார், புஷ்பா ஆகியோர் சேர்ந்து வாடகைக்கு எடுத்தோம் என்றால் சரியல்ல. நடேசன், செந்தில்குமார், புஷ்பா ஆகியோருக்கு இரத்தினம்பிள்ளையை யார் என்றே தெரியாது.

வா.சா.ஆ.–1 வாடகை ஒப்பந்த பத்திரத்தில் நான், 2ம் பிரதிவாதி ஆசைத்தம்பி, 3ம் பிரதிவாதி அன்பழகன், நடேசன், செந்தில்குமார், புஷ்பா ஆகியோர் சேர்ந்து எழுதியதாக உள்ளது என்றால் சரிதான். வழக்குரை பத்தி 4ல் வருடத்திற்கு ரூ.1,00,000/– வாடகையும், முன்பணமாக ரூ.2,10,000/– என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி விவரம் வா.சா.ஆ.–1 ஆவணத்தில் இடம்பெற்றுள்ளதா என்றால் சாட்சி 2ம் பிரதிவாதி ஆசைத்தம்பி தன்னிடம் Tiic –ல் இருந்த கடனை மறைத்து தன்னிடம் வாடகைக்கு பேசி பதிவும் செய்துவிட்டதாக பதில் அளிக்கிறார். மேலும் தான் ரூ.5,00,000/– செலவு செய்தபின்பு Tiic அலுவலர்கள் எங்கள் மில்லில் நீங்கள் எப்படி வேலை செய்கிறீர்கள் என்று கேட்டதாக பதில் கூறுகிறார்.

இரத்தினம்பிள்ளையிடம் மில்லை வாடகைக்கு தான் எடுத்தேன். வாடகைக்கு எடுத்திருந்ததால் Tiic–ல் உள்ள கடன் விவரத்தை 1 முதல் 3 பிரதிவாதிகளாகிய நாங்கள் உங்களிடம் சொல்லவேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. நான் இரத்தினம்பிள்ளையிடமிருந்து மில்லை வாடகைக்கு வாங்கியதிலிருந்து ரூ.5,00,000/– செலவு செய்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

வா.சா.ஆ.–4 மிஷினரி செக்யூரிட்டி டெபாசிட் பத்திரத்தில் நான் நடேசன், செந்தில்குமார், புஷ்பா ஆகியோர் கையொப்பமிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.–4 ஆவணத்தில் கண்டுள்ளவாறு இயந்திரங்களை நாங்கள் சுவாதீனம் எடுத்துக்கொண்டோம். வா.சா.ஆ.–2 ஆவணம் எழுதப்பட்ட தேதி 21.11.1994 என்றால் சரிதான். வழக்குரையில் 5வது பத்தியில் 22.11.1994 என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி எனக்கு இடையூறு செய்ததற்கு புகார் கொடுக்கவில்லை. மில்லுக்கு கூடுதலாக மின்சாரம் தேவைப்படுகிறது என்பதற்கு நான் 2ம் பிரதிவாதியிடம் (என்னிடம்) கேட்டேனா என்றால் கேட்டேன். 2ம் பிரதிவாதியிடம் நான் கூடுதல் மின்இணைப்பு பற்றி கேட்கவேயில்லை என்றால் சரியல்ல.

ஓமலூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஸ்ரீவெங்கடேஷ்வரா கம்பெனி சார்பாக நடேசன் அ.வ.எண். 89/2000 தாக்கல் செய்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. ஸ்ரீவெங்கடேஷ்வரா கம்பெனியில் நான் , நடேசன், செந்தில்குமார், புஷ்பா ஆகியோர் பங்குதாரர்கள். நான் மட்டுமே இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மற்ற பங்குதாரர்கள் கம்பெனியிலிருந்து விலகிக்கொண்டார்கள். அவ்வாறு மற்ற பங்குதாரர்கள் விலவிய விவரத்தை 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தெரியப்படுத்தினேனா என்றால் அதற்கு அவசியமில்லை.

3 பங்குதாரர்கள் விலகியதற்கு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்களா என்றால் எழுதிக்கொடுத்துள்ளார்கள். ஸ்ரீவெங்கடேஷ்வரா கம்பெனிக்கு தற்பொழுது நான் மட்டுமே உரிமையாளர் என்பதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. மாசு கட்டப்பாட்டு வாரிய உத்தரவின்பேரில் Water Treatment Plant அமைக்க ரூ.13,00,000/- நான் செலவு செய்துள்ள விவரத்தை வழக்குரையிலும் முதல்விசாரணையிலும் சொல்லியுள்ளேன். Water Treatment Plant எப்பொழுது நிறுவப்பட்டது என்று வழக்குரையிலும் முதல்விசாரணையிலும் சொல்லியுள்ளேன்.

ரூ.13,00,000/-செலவு செய்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி Water Treatment Plant நான்குபேரும் சேர்ந்து பொதுவாக கட்டினோம். தொழிலாளர்கள் குடியிருப்பு கட்டுவதற்கு ரூ.12,00,000/- செலவு செய்துள்ள விவரம் வழக்குரையில் சொல்லியிருப்பேன். மேற்படி ரூ.12,00,000/- கம்பெனி மூலமாக செலவு செய்தோம். மேற்படி ரூ.12,00,000/- செலவு செய்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன்.

21 வருடங்கள் தொடர்ச்சியாக நான் கம்பெனியை நடத்துகிறேன் என்பதை ஏற்றுக்கொண்டு, 21 வருடம் முடிவில் 2ம் பிரதிவாதி (நான்) ரூ.25,00,000/- எனக்கு தருவதாக சொன்னதை நம்பி கட்டிடத்தை உறுதியாக கட்டினேன்.

( குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

Sd./-S. Jeganathan,
I Additional District Judge,
Salem.